آقا کا مہینہ

Aqa ka Mahena

# அண்ணலாரின் மாதம்

இந்த சிறுநூல் ஷேகே தரீகத், அமீரே அஹ்லுஸ் ஸுன்னத், த.:.வதே இஸ்லாமியின் ஸ்தாபகர், ஹழ்ரத்,அல்லாமா, மௌலானா **முஹம்மத் இல்யாஸ் அத்தார் காதிரி ரzஸவி** دَامَتْ بَرَكَاتُهُمُ الْعَالِيَه அவர்களால் உருது மொழியில் எழுதப்பட்ட தாகும். மொழி பெயர்ப்பு மஜ்லிஸ் தமிழ் மொழியில் மொழி பெயர்த்துள்ளது. இதன் மொழி பெயர்ப்பிலோ அல்லது அச்சுக் கோவையிலோ ஏதாவது தவறுகள் தென்பட்டால் பின்வரும் முகவரியில் அமைந்துள்ள மொழி பெயர்ப்பு மஜ்லிஸோடு தொடர்பு கொண்டு நற்கூலியைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**குறிப்பு** :- இதில் வரும் ஷரீஆ சட்டங்கள் யாவும் ஹன.:.பி மத்ஹபின்படியே எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


**Translation Majlis (Dawat-e-Islami)**

Alami Madani Markaz, Faizan-e-Madinah, Mahallah Saudagran,

Purani Sabzi Mandi, Bab-ul-Madinah, Karachi, Pakistan

**Phone:** ☎ +92-21-34921389 to 91

**Email:** 🖃 translation@dawateislami.net

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ وَالصَّلٰوةُ وَالسَّلَامُ عَلٰى سَيِّدِ الْمُرْسَلِيْنَ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ ط بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ط

## புத்தகம் வாசிக்கும்போது ஓதும் துஆ

இஸ்லாமிய புத்தகங்களையோ அல்லது பாடங்களையோ வாசிக்கும்போது பின்வரும் துஆவை ஓதிக்கொள்ளவும். اِنْ شَآءَاللّٰه عَزَّوَجَلَّ வாசிப்பவைகள் ஞாபகத்தில் இருக்கும்.

اَللّٰهُمَّ افْتَحْ عَلَيْنَا حِكْمَتَكَ وَانْشُرْ
عَلَيْنَا رَحْمَتَكَ يَا ذَا الْجَلَالِ وَالْاِكْرَام

**யா அல்லாஹ் عَزَّوَجَلَّ! அறிவு ஞானத்தின் வாயிலை நமக்காக திறந்து விடுவாயாக. மேலும் நமக்கு ரஹ்மத்துடைய கதவுகளை திறந்து விடுவாயாக கண்ணியமும், உயர்வும் உடையவனே!**

(அல் முஸ்தத்ரஃப், பாகம் 1, பக்கம் 40, தாருல் ஃபிக்ர், பேரூத்)

**(ஆரம்பத்திலும், கடைசியிலும் ஒரு தடவை ஸலவாத் ஓதிக்கொள்ளவும்)**

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ وَالصَّلٰوةُ وَالسَّلَامُ عَلٰى سَيِّدِ الْمُرْسَلِيْنَ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ ؕ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ؕ

# அண்ணலாரின் மாதம் [1]

ஷைத்தான் எவ்வளவு சோம்பலை உண்டாக்கினாலும், இச்சிறுநூலை முழுமையாகப் படியுங்கள். اِنْ شَآءَاللّٰه عَزَّوَجَلَّ நோன்பு மற்றும் இறைவனுடைய இபாதத்தில் உற்சாகம் ஏற்படும்.

## ஸலவாத், ஸலாமுடைய ஆஷிகின் அந்தஸ்து

ஹழ்ரத் ஸய்யிதுனா ஷேய்க் அபூபக்ர் ஷிப்லி عَلَيْهِ رَحْمَةُ اللهِ الْوَالِي அவர்கள் ஒருநாள் பக்தாதின் தேர்ச்சி பெற்ற மாபெரும் மார்க்க அறிஞரான ஹழ்ரத் ஸய்யிதுனா அபூபக்ர் பின் முஜாஹித் عَلَيْهِ رَحْمَةُ اللهِ الْوَالِي அவர்களிடம் வருகை தந்தார்கள். அவர்கள் உடனே எழுந்து நின்று இவரை கட்டித் தழுவி நெற்றியில் முத்தமிட்டு மிகவும் மரியாதையுடன் தம் அருகில் அமர வைத்தார்கள். அப்போது அங்கே அமர்ந்திருந்தவர்கள், "யா ஸய்யிதி! தாங்களும், பக்தாத் வாசிகளும் இன்று வரை இவரை Dதீவானா (பித்தன்) என்று கூறி வந்தீர்கள், ஆனால் இன்று இவருக்கு இந்தளவு கண்ணியம் எதற்காக?" என்று கேட்டனர், அதற்கு ஹழ்ரத் அவர்கள் பதிலளித்தார்கள்— நான் வெறுமனே

[1] (இந்த சொற்பொழிவு அமீரே அஹ்லுஸ் ஸுன்னத் دَامَتْ بَرَكَاتُهُمُ الْعَالِيَه அவர்களால் (ஹிஜ்ரி 1431 ரஜப் மாதம் பிறை 26 / 8.7.2010 இல்) குர்ஆன், சுன்னாக்களை போதிக்கின்ற அரசியல் சார்பற்ற உலகளாவிய அமைப்பான த:'வதே இஸ்லாமியின் சர்வதேச மதனி மர்கZஸான :'பைZஸானே மதீனாவின் வாராந்த இஜ்திமாவில் நிகழ்த்தப்பட்டது. அவசியமான ஒரு சில மாற்றங்களோடு எழுத்து வடிவில் இங்கே தரப்படுகிறது)

அவ்வாறு செய்யவில்லை, اَلْحَمْدُلِلّٰه இன்றிரவு நான் கனவிலே ஈமானை உற்சாகப்படுத்துகின்ற ஒரு காட்சியைக் கண்டேன், அதாவது ஹழ்ரத் ஸய்யிதுனா அபூபக்ர் ஷிப்லி عَلَيْهِ رَحْمَةُ اللّٰهِ الْوَالِي அவர்கள் பெருமானாரின் திருச்சமூகத்திற்கு வந்தபோது ஈருலக அருளாளர், ஒளிமயமான நாயகர், மனித குலத்தின் மாமன்னர் صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் எழுந்து, இவரை தம் நெஞ்சோடு அணைத்து, நெற்றியில் முத்தமிட்டு தன்னோடு அமர வைத்துக் கொண்டார்கள். நான் கேட்டேன், "யா ரசூலல்லாஹ் صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களே! ஷிப்லி அவர்களின் மீது இந்த அளவுக்கு அன்பு செலுத்துவதற்கு காரணமென்ன?" அதற்கு அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் அன்பர், மறைமுக ஞானமுடையவர், குறைகளை விட்டும் தூய்மையானவர்களான மாநபி صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் (மறைமுக தகவலை அறிவித்தவாறு) கூறினார்கள்– "இவர் ஒவ்வொரு தொழுகைக்குப் பின்னரும் இந்த ஆயத்தை ஓதி வருபவராக இருக்கின்றார்கள்:

لَقَدْ جَآءَكُمْ رَسُوْلٌ مِّنْ اَنْفُسِكُمْ عَزِيْزٌ عَلَيْهِ مَا عَنِتُّمْ حَرِيْصٌ عَلَيْكُمْ

بِالْمُؤْمِنِيْنَ رَءُوْفٌ رَّحِيْمٌ ﴿۱۲۸﴾

(ஜுஸ்உ 11, சூரதுத்தௌபா–128)

அதன் பின்னர் இவர் என் மீது ஸலவாத் ஓதுவார். (அல்கவ்லுல் பதீஃ, பக்கம்–346)

صَلُّوْا عَلَى الْحَبِيْب صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

## அண்ணலாரின் صَلَّی اللہُ تَعَالٰی عَلَیْہِ وَاٰلِہٖ وَسَلَّم மாதம்

கண்மணி நாயகம், ரசூலே அக்ரம் صَلَّی اللہ تَعَالٰی عَلَیْہِ وَاٰلِہٖ وَسَلَّم அன்னவர்கள், சங்கையான ஷஃபான் மாதத்தை குறித்து அறிவித்துள்ளார்கள்– شَعْبَانُ شَهْرِیْ وَرَمَضَانُ شَهْرُ اللهِ அதாவது "ஷஃபான் என்னுடைய மாதமாகும், இன்னும் ரமழான் அல்லாஹ்வுடைய மாதமாகும்." (அல்ஜாமிஉஸ் ஸகீர் லிஸ்ஸுயூதி, பக்கம்–301, ஹதீஸ்–4889)

## شعبان என்பதிலுள்ள ஐந்தெழுத்துக்களின் வசந்தங்கள்

سُبۡحٰنَ اللّٰه عَزَّوَجَلَّ! சங்கையான ஷஃபான் மாதத்தின் மகத்துவங்களின் மீது அர்ப்பணம்! நமது இன்னுயிர் நாயகம், மக்கீ மதனி முஸ்தபா صَلَّی اللہ تَعَالٰی عَلَیْہِ وَاٰلِہٖ وَسَلَّم அன்னவர்கள் "**இது என்னுடைய மாதம்**" என்று அறிவித்ததே இதனுடைய சிறப்புக்கு போதுமானதாகும். ஸய்யிதுனா கௌசுல் அஃலம், ஷேக் அப்துல் காதிர் ஜீலானி ஹம்பலி عَلَیْہِ رَحۡمَۃُ اللہِ الۡوَالِی அவர்கள் شعبان என்பதிலுள்ள ஐந்தெழுத்துக்கள்–"ش، ع، ب، ا، ن" இவைகளை குறித்து பதிவு செய்துள்ளார்கள்: ش என்பதன் நோக்கம் 'ஷர்ஃப்' அதாவது மேன்மை, ع என்பதன் நோக்கம் 'உலுவ்' அதாவது உயர்வு, ب என்பதன் நோக்கம் 'Bபிர்' அதாவது நற்செயல், "ا" என்பதன் நோக்கம் 'உல்ஃபத்' அதாவது பற்றுதல், ن என்பதன் நோக்கம் 'நூர்' அதாவது ஒளி என்பதாகும். இந்த ஐந்து விடயங்களையும் அல்லாஹுதஆலா தன் அடியார்களுக்கு இந்த மாதத்தில் வழங்குகிறான். இந்த மாதத்தில் நன்மைகளின் வாயில்கள்

திறக்கப்பட்டு, அருள்வளங்கள் பொழியத்துவங்கி விடுகின்றன, தவறுகள் அழிக்கப்படுவதோடு, பாவங்களுக்கு பரிகாரமும் நிறை வேற்றப்படுகின்றன. மக்களின் நலன்விரும்பியும், தலைவர்களின் தலைவருமான முஹம்மத் முஸ்தஃபா صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் மீது அதிகமான ஸலவாத்தும் கூறப்படுகின்றன. மேலும் இது அண்ணலெம் பெருமானார் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் மீது ஸலவாத் அனுப்புகின்ற மாதமாகும். (ஙுன்யதுத் தாலிபீன், பாகம்–1, பக்கம்–341,342)

صَلُّوْا عَلَى الْحَبِيْب صَلَّى اللهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

## சங்கையான ஸஹாபாக்களின் عَلَيْهِمُ الرِّضْوَان ஆர்வம்

ஹழ்ரத் ஸய்யிதுனா அனஸ் பின் மாலிக் رَضِىَ اللهُ تَعَالٰى عَنْهُ அவர்கள் அறிவிக்கின்றார்கள், ‘‘ஷஃபான் மாதத்தின் பிறை தென்பட்டதும் சங்கையான ஸஹாபாக்கள் عَلَيْهِمُ الرِّضْوَان குர்ஆன் ஷரீஃப் ஓதுவதில் மும்முரமாகி விடுவார்கள், தங்கள் பொருட்களுக்கான ஸகாத்தை வெளியாக்கி, ஏழை எளியவர்களான முஸ்லிம்கள் ரமழான் மாதத்தின் நோன்புக்கான ஆயத்தம் செய்வதற்காக வழங்கி விடுவார்கள், அதிகாரிகள் கைதிகளை வரவழைத்து யாருக்கு மார்க்க தண்டனை அளிக்க வேண்டுமோ அவர்களுக்கு தண்டனை அளிப்பதோடு, மீதமிருப்போரில் எவர்கள் விடுதலைக்கு தகுதியானவர்களோ அவர்களை விடுதலை செய்து விடுவார்கள், வியாபாரிகள் தங்கள் கடன்களை அடைத்து விடுவதோடு, மற்றவர்களிடமிருந்து தனது கடன்களை வசூலித்துக் கொள்வார்கள். (இவ்வாறு முபாரக்கான ரமழான் மாதம் வருவதற்கு முன்னரே தன்னை ஓய்வாக்கிக்

கொள்வார்கள்) மேலும் ரமழான் மாதத்தின் பிறை தென்பட்டதும் குளித்து (ஒருசிலர்) இஃதிகாபில் அமர்ந்து விடுவார்கள்.” (நுன்யதுத் தாலிபீன், பாகம்–1, பக்கம்–341)

## தற்காலத்து முஸ்லிம்களின் ஆர்வம்

سُبْحَانَ اللّٰه عَزَّوَجَلَّ! முன்னைய காலத்து முஸ்லிம்களுக்கு இபாதத்தில் எந்தளவு ஆர்வமிருந்தது! ஆனால் கைஷேதம்! இன்றைய முஸ்லிம்களுக்கு பெரும்பாலும் செல்வங்களை சேகரிப்பதிலேயே ஆர்வமுள்ளது. முன்னைய காலத்து மதனி சிந்தனை வைத்திருந்த முஸ்லிம்கள் புனிதமான நாட்களில் எல்லாம் வல்ல இரட்சகனின் இபாதத்தில் அதிகமாக ஈடுபட்டு அவனுடைய நெருக்கத்தை அதிகளவில் பெறுவதற்கு முயற்சி எடுத்தார்கள், ஆனால் இன்றைய முஸ்லிம்களோ புனிதமான நாட்களில், குறிப்பாக முபாரக்கான ரமழானில் உலகின் இழிவான செல்வத்தை ஈட்டுவதற்காக விதவித மான திட்டங்களைத் தீட்டுகிறார்கள். அல்லாஹ் عَزَّوَجَلَّ தன் அடியார்க ளின் மீது கருணை புரிந்து நற்செயல்களுக்கு நிறைய நன்மைகளைப் பெருக்கி விடுகிறான், ஆனால் இவ்வுலக செல்வத்தின் மீது ஆசைக் கொண்டவர்கள் முபாரக்கான ரமழானில் தங்கள் பொருட்களின் விலையைக் கூட்டி, தங்களுடைய முஸ்லிம் சகோதரர்களையே கொள்ளையடிக்க ஆரம்பித்து விடுகிறார்கள். கோடானகோடி கைஷேதம்! முஸ்லிம்களுக்கு நலவை நாடுகின்ற ஆர்வம் இன்று இல்லாமல் போகிறதே!

சிறந்தோர்க்கும் சிறந்த எங்கள் அண்ணலே கேளும்
உங்கள் அடியார்களின் இழிநிலையை சற்று பாரும்

உங்களது மார்க்கமோ கிளம்பியது பெருமையுடன்
தங்கி விட்டது பிறநாட்டிலே கேட்பாரற்று வறுமையுடன்
அடியார்களை வழிநடத்தும் காவலரே காப்பாற்றும்
அழிவுக்கு மிக அருகில் வந்துள்ளது எங்கள் நிலை

صَلُّوْا عَلَى الْحَبِيْب     صَلَّى اللهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

## நஃபிலான நோன்புகளுக்கு விருப்பமான மாதம்

இனிமையான இஸ்லாமிய சகோதரர்களே! நமது உள்ளங்களின் அமைதியும், ஈருலகத் தலைவருமான, நாயகம் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் ஷஃபான் மாதத்தில் அதிகமாக நோன்பு நோற்பதை விரும்புவார்கள். ஹழ்ரத் ஸய்யிதுனா அப்துல்லாஹ் பின் அபீகைஸ் رَضِیَ اللهُ تَعَالٰی عَنْهُ அவர்கள் அறிவிக்கிறார்கள், உம்முல் முஃமினீன் ஸய்யிததுனா ஆயிஷா ஸித்தீகா رَضِیَ اللهُ تَعَالٰی عَنْهَا அவர்கள் கூறுவதை கேள்விப்பட்டுள்ளேன், நபிமார்களின் தலைவர், மிஃராஜின் நாயகர், அண்ணல் நபி صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களுக்கு விருப்பமான மாதம் ஷஃபானாகும், அதில் அவர்கள் நோன்பு நோற்பார்கள். பின்பு அதை புனித ரமழான் மாதத்துடனும் இணைத்து விடுவார்கள். (சுனன் அபூதாவூத், பாகம்–2, பக்கம்–476, ஹதீஸ்–2431)

## மக்கள் இதை விட்டும் பராமுகமாக உள்ளனர்

ஹழ்ரத் ஸய்யிதுனா உஸாமா பின் ஸைத் رَضِیَ اللهُ تَعَالٰی عَنْهُ அவர்கள் கூறுகிறார்கள், நான் கேட்டேன், "யாரசூலல்லாஹ் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم! நான் பார்க்கிறேன், நீங்கள் ஷஃபான் மாதத்தில் நோன்பு நோற்பதை போன்று எந்த மாதத்திலும் நோற்பதில்லையே?" அதற்கு அன்னவர்

கள் கூறினார்கள், "ரஜப் மற்றும் ரமழான் மாதத்திற்கு இடையே இந்த மாதம் உள்ளது, மக்கள் இதை விட்டும் பராமுகமாக உள்ளனர், இந்த மாதத்தில் மனிதர்களின் அமல்கள் யாவும் ரப்புல் ஆலமீன் அல்லாஹ் عَزَّوَجَلَّவின் பக்கம் உயர்த்தப்படுகிறது. இன்னும் என்னுடைய அமல்கள் உயர்த்தப்படும்போது நான் நோன்பாளியாக இருப்பது எனக்கு மிகவும் விருப்பமானதாகும்." (சுனன் நஸாஈ, பக்கம்–387, ஹதீஸ்–2354)

## மரணிப்போரின் பட்டியலை தயாரிக்கும் மாதம்

ஹழ்ரத் ஸய்யிததுனா ஆயிஷா சித்தீகா رَضِیَ اللهُ تَعَالٰی عَنْهَا அவர்கள் கூறுகிறார்கள், தூதுத்துவ பேரரசர் صَلَّی اللهُ تَعَالٰی عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் ஷஃபான் மாதம் முழுவதும் நோன்பு நோற்று வந்தார்கள். அவர்கள் கூறுகிறார்கள், நான் கேட்டேன், யா ரசூலல்லாஹ் صَلَّی اللهُ تَعَالٰی عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم! அனைத்து மாதங்களிலும் தாங்களுக்கு மிகவும் விருப்பமானது ஷஃபான் மாதம் நோன்பு நோற்பதா? அதற்கு அல்லாஹ்வின் அன்பர், அண்ணல் நபி صَلَّی اللهُ تَعَالٰی عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் கூறினார்கள், அல்லாஹ் عَزَّوَجَلَّ இந்த ஆண்டு மரணிக்கும் ஒவ்வொரு உயிரையும் எழுதி விடுகிறான், இன்னும் என்னுடைய பிரிவு நேரம் வரும்போது நான் நோன்பாளியாக இருப்பது எனக்கு மிகவும் விருப்பமாகும். (முஸ்னத் அபீ யஃலா, பாகம்–4, பக்கம்–277, ஹதீஸ்–4890)

## அண்ணலார் ஷஃபானின் அதிகமான நோன்புகளை நோற்றார்கள்

புகாரி ஷரீஃபில் வந்துள்ளது, ஹழ்ரத் ஸய்யிததுனா ஆயிஷா சித்தீகா رَضِیَ اللهُ تَعَالٰی عَنْهَا அவர்கள் அறிவிக்கிறார்கள், ரசூலுல்லாஹ் صَلَّی اللهُ تَعَالٰی عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் ஷஃபான் மாதத்தை விட அதிகமாக வேறு எந்த

மாதத்திலும் நோன்பு நோற்க மாட்டார்கள், மாறாக ஷஃபான் மாதம் முழுவதும் நோன்பு நோற்பார்கள். மேலும் கூறுவார்கள், உங்கள் சக்திக்கு ஏற்றவாறு அமல் செய்யுங்கள், நீங்கள் சோர்வடையாதவரை அல்லாஹ் عَزَّوَجَلَّ தன்னுடைய அருளை நிறுத்துவதில்லை. (ஸஹீஹ் புகாரி, பாகம்–1, பக்கம்–648, ஹதீஸ்–1970)

## பரிசுத்த ஹதீஸின் விளக்கம்

புகாரியின் விரிவுரையாளரான ஹழ்ரத் அல்லாமா முஃப்தி முஹம்மத் ஷரீஃபுல் ஹக் அம்ஜதீ عَلَيْهِ رَحْمَةُ اللّٰهِ الْقَوِى அவர்கள் இந்த ஹதீஸின் கீழ் எழுதுகிறார்கள், இதற்கு அர்த்தம் என்னவென்றால், ஷஃபானில் பெரும்பாலான நாட்களில் நோன்பு நோற்றார்கள். அதைத்தான் அதிகமான எண்ணிக்கையாக முழுவதும் (அதாவது முழு மாதமும்) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறெனில், "அவர் இரவு முழுக்க இபாதத் செய்தார்" என்று சிலசமயம் கூறுவதுண்டு. அவர் இரவிலே உணவு உட்கொண்டிருப்பார் மேலும் ஏனைய தேவைகளையும் நிறை வேற்றியிருப்பார். இங்கே பெரும்பாலும் என்பதை முழுவதும் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் கூறுகிறார்கள், இந்த ஹதீஸிலிருந்து விளங்குகிறது, ஷஃபானில் யாருக்கு சக்தியுள்ளதோ அவர்கள் அதிகளவு நோன்பு நோற்க வேண்டும். பொதுவாக பலவீனமானவர் கள் நோன்பு நோற்க வேண்டியதில்லை, ஏனெனில் அதனால் ரமழான் மாத நோன்பிற்கு பாதிப்பு ஏற்படலாம். மேலும் ஷஃபானின் அரை மாதத்திற்குப் பிறகு நோன்பு நோற்க வேண்டாம் எனும் ஹதீஸ்களுக் கும் இதுவே நோக்கமாகும். (திர்மிதி, ஹதீஸ் 738) (நுஸ்ஹதுல் காரி, பாகம்–3, பக்கம்– 377/380)

## தஃவதே இஸ்லாமியில் நோன்புகளின் வசந்தங்கள்

தஃவதே இஸ்லாமியின் பதிப்பகமான மக்தபதுல் மதீனாவினால் அச்சிடப்பட்ட 1548 பக்கங்கள் அடங்கிய நூல் **ஃபைஸானே சுன்னத்** (முதல் பாகத்) தின் 1379 ஆவது பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது, ஹுஜ்ஜதுல் இஸ்லாம் ஹழ்ரத் ஸய்யிதுனா இமாம் முஹம்மத் பின் முஹம்மத் பின் முஹம்மத் கZஸ்ஸாலி عَلَيْهِ رَحْمَةُ اللهِ الْوَالِي அவர்கள் அறிவித்துள்ளார்கள், மேற்கூறப்பட்ட பரிசுத்த ஹதீஸில் சங்கையான ஷஃபான் மாதம் முழுவதும் நோன்பு என்பதன் அர்த்தம், ஷஃபான் மாதத்தின் அதிகமான (அதாவது மாதத்தின் அரைவாசியை விட அதிகமான) நோன்பாகும். (முகாஷஃபதுல் குலூப், பக்கம்–303) யாராவது சங்கையான ஷஃபான் மாதம் முழுவதும் நோன்பு நோற்க நினைத்தால் அதற்கும் தடையேதுமில்லை. اَلْحَمْدُ لِلّٰهِ عَزَّوَجَلَّ குர்ஆனையும், சுன்னாவையும் போதிக்கின்ற அரசியல் சார்பற்ற உலகளாவிய அமைப்பான **தஃவதே இஸ்லாமி**யின் பல இஸ்லாமிய சகோதர, சகோதரிகளிடம் ரஜபுல் முரஜ்ஜப் மற்றும் ஷஃபானுல் முஅழ்ழம் ஆகிய இரண்டு மாதங்களிலும் நோன்பு நோற்கும் வழமை உள்ளது. இவ்வாறு தொடர்ந்து நோன்பு நோற்றுக்கொண்டு இவர்கள் ரமழான் மாத நோன்புடன் இணைந்துக் கொள்கிறார்கள்.

## ஷஃபானின் அதிகமான நோன்புகளை நோற்பது சுன்னத்தாகும்

உம்முல் முஃமினீன் ஹழ்ரத் ஸய்யிததுனா ஆயிஷா சித்தீகா رَضِیَ اللهُ تَعَالٰی عَنْهَا அவர்கள் அறிவிக்கிறார்கள், கருணை நபி நாதர், ஒளி வடிவானவர், மனித குலத்து மாமன்னர், கண்மணி நாயகம் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் ஷஃபான் மாதத்தை விட அதிகமாக எந்த மாதத்திலும்

நோன்பு நோற்றதாக நான் பார்க்கவில்லை. அன்னவர்கள் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم ஒருசில நாட்களைத் தவிர முழு மாதத்தின் நோன்பையும் நோற்பவர்களாக இருந்தார்கள். (சுனன் திர்மிதி, பாகம்–2, பக்கம்–182, ஹதீஸ்–736)

உங்கள் சுன்னாவிலே சென்று என்னுயிர் பிரியும்போது
என்னை தாங்கள் அணைக்க வேண்டும் மதனி மதீனா நாதர்

صَلُّوْا عَلَى الْحَبِيْب صَلَّى اللهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

## நன்மைகளின் இரவுகள்

உம்முல் முஃமினீன் ஹழ்ரத் ஸய்யிததுனா ஆயிஷா சித்தீகா رَضِيَ اللهُ تَعَالٰى عَنْهَا அவர்கள் அறிவிக்கிறார்கள், கண்மணி நாயகம் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் கூறுவதை நான் கேட்டேன், அல்லாஹ் عَزَّوَجَلَّ (குறிப்பாக) நான்கு இரவுகளில் நன்மைகளின் கதவுகளை திறந்து விடுகிறான்: (1) ஹஜ்ஜுப் பெருநாளுடைய இரவு (2) நோன்புப் பெருநாளுடைய (பிறை) இரவு (3) ஷஃபானின் பதினைந்தாவது இரவு, அதாவது அன்றிரவு, மரணிப்போரின் பெயர்கள், மனிதர்களின் உணவுகள் மேலும் (இந்த ஆண்டு) ஹஜ் செய்வோரின் பெயர்கள் எழுதப்படுகின்றன. (4) அரஃபாவின் (அதாவது துல்ஹஜ் 8 மற்றும் 9 க்கு இடைப்பட்ட) இரவு, (ஃபஜ்ருடைய) பாங்கு வரை. (தஃப்ஸீர் துர்ரெ மன்சூர், பாகம்–7, பக்கம்–402, தாருல் ஃபிக்ர், பேரூத்)

## நுண்ணிய தீர்ப்பு

இனிமையான இஸ்லாமிய சகோதரர்களே, சங்கையான ஷஃபான் மாதத்தின் பதினைந்தாவது இரவு எவ்வளவு நுட்பமானது! யாருடைய

விதியில் என்ன எழுதப்படுகிறதோ யாரறிவார்! சிலசமயம் அடியான் பராமுகத்தில் இருந்து விடுகிறான், ஆனால் அவனைப்பற்றி ஏதேதோ முடிவாகி விடுகிறது. நுன்யதுத் தாலிபீனில் வந்துள்ளது, பல கஃபன் துணிகள் துவைக்கப்பட்டு தயாராக வைக்கப்பட்டிருக்கும், ஆனால் அதனை அணிய வேண்டியவர்கள் கடைத்தெருக்களிலே அலைந்து, திரிந்துக் கொண்டிருப்பார்கள், பல மனிதர்கள் இவ்வாறு இருக்கின் றார்கள், அதாவது அவர்களது மண்ணறைகள் தோண்டப்பட்டு தயாராக வைக்கப்பட்டிருக்கும், ஆனால் அதில் அடக்கப்படுபவர்கள் மகிழ்ச்சியில் மூழ்கிக் கொண்டிருப்பார்கள், சில மனிதர்கள் சிரித்துக் கொண்டிருப்பார்கள் அவர்களது மரண நேரம் நெருங்கிக்கொண்டிருக் கும், பல இடங்களின் கட்டிட வேலைகள் முழுமை அடைந்திருக்கும், அத்துடனே அதன் உரிமையாளர்களுடைய வாழ்நாளின் நேரமும் முழுமை அடைந்திருக்கும். (நுன்யதுத் தாலிபீன், பாகம்–1, பக்கம்–348)

மரணத்தின் நேரத்தை எந்த மனிதரும் அறியமாட்டார்
பொருட்களோ நூறாண்டின் மறுநொடியை அறியமாட்டார்

صَلُّوْا عَلَى الْحَبِيْب صَلَّى اللهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

## பல பாவிகள் மன்னிக்கப்பட்டு விடுகின்றனர், ஆனால் . . .

ஹழ்ரத் ஸய்யிததுனா ஆயிஷா சித்தீகா رَضِیَ اللهُ تَعَالٰی عَنْهَا அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது: அகிலத்தின் அருளாளர், அண்ணல் நபி صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் அறிவித்தார்கள், என்னிடம் ஜிப்ராஈல் (عَلَيْهِ السَّلَام) அவர்கள் வந்து கூறினார்கள், ஷஃபானின் 15 வது

இரவாகும், இதில் அல்லாஹ் عَزَّوَجَلَّ Bபனீகல்Bப் கோத்திரத்தாரின் ஆடுகளுடைய உரோமங்களின் அளவுக்கு நரகத்திலிருந்து விடுதலை அளிக்கிறான். ஆனால், **காஃபிர்** (இறைநிராகரிப்பாளர்), **பகைமை** கொண்டவர்கள், **உறவுகளை** முறிப்பவர்கள், **ஆடைகளை** தொங்க விடுபவர்கள், **பெற்றோர்களுக்கு** அடிபணியாதவர்கள் இன்னும் **மது** அருந்தும் பழக்கமுடையவர்கள் ஆகியோரின் பக்கம் அருட்பார்வையைக் கொண்டு பார்க்க மாட்டான். (ஷுஅபுல் ஈமான், பாகம்–3, பக்கம்–384, ஹதீஸ்–3837)

(பரிசுத்த ஹதீஸிலே ஆடைகளை தொங்க விடுபவர்கள் என்று வந்துள்ளதே, அதன் அர்த்தம் லுங்கி, காற்சட்டை அல்லது நீலமான ஜுப்பா போன்றவற்றை பெருமையுடன் கரண்டைக்காலுக்கு கீழே தொங்க விடுபவர்கள் ஆவார்கள்) கோடிக்கணக்கான ஹம்பலிகளின் மாபெரும் முன்னோடியான ஹழ்ரத் ஸய்யிதுனா இமாம் அஹ்மத் பின் ஹம்பல் رَضِیَ اللّٰہُ تَعَالٰی عَنْہُ அவர்கள், ஹழ்ரத் ஸய்யிதுனா அப்துல்லாஹ் பின் அம்ர் رَضِیَ اللّٰہُ تَعَالٰی عَنْہُمَا அவர்களைக் கொண்டு அறிவித்திருக்கும் ரிவாயத்தில், கொலைக் காரனைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது. (முஸ்னத் இமாம் அஹ்மத், பாகம்–2, பக்கம்–589, ஹதீஸ்–6653)

ஹழ்ரத் ஸய்யிதுனா கஸீர் பின் முர்ரா رَضِیَ اللّٰہُ تَعَالٰی عَنْہُ அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது, அகிலத்தின் அருளாளர், அண்ணல் நபி صَلَّی اللّٰہُ تَعَالٰی عَلَیْہِ وَاٰلِہٖ وَسَلَّم அன்னவர்கள் அறிவித்துள்ளார்கள், அல்லாஹ் عَزَّوَجَلَّ ஷஃபான் மாதத்தின் 15வது இரவில் உலகத்தார் அனைவரை யும் மன்னித்து விடுகிறான், **இணைவைப்பாளர்கள்** மற்றும் **பகைமை கொண்டவர்களைத்** தவிர. (ஷுஅபுல் ஈமான், பாகம்–3, பக்கம்–381, ஹதீஸ்–3830)

## ஹழ்ரத் தாவூத் عَلَيْهِ السَّلَام அவர்களுடைய துஆ

அமீருல் முஃமினீன் ஹழ்ரத் மௌலா முஷ்கில்குஷா, ஸய்யிதுனா அலிய்யுல் முர்தழா كَرَّمَ اللّٰهُ تَعَالٰى وَجْهَهُ الْكَرِيْم அவர்கள் சங்கையான ஷஃபான் மாதத்தின் பதினைந்தாவது அதாவது பராஅத்தின் இரவில் பெரும்பாலும் வெளியில் வருவார்கள். ஒருமுறை அதேபோல் பராஅத் இரவில் வெளியே வந்து, வானத்தை நோக்கி பார்வையை உயர்த்தி கூறலானார்கள், ஒருமுறை அல்லாஹ்வின் தூதரான ஹழ்ரத் ஸய்யிதுனா தாவூத் عَلٰى نَبِيِّنَا وَعَلَيْهِ الصَّلٰوةُ وَالسَّلَام அவர்கள் ஷஃபான் மாதத்தின் பதினைந்தாவது இரவன்று வானத்தின் பக்கம் பார்வையை செலுத்தி கூறினார்கள், இது எத்தகைய நேரமென்றால், இந்த நேரத்தில் யாராவது மனிதன், அல்லாஹ் عَزَّوَجَلَّ விடம் என்ன துஆ கேட்டாலும், அவனது துஆவை அல்லாஹ் عَزَّوَجَلَّ ஏற்றுக் கொள்கிறான். மேலும் யார் பாவமன்னிப்புக் கோருகிறாரோ, அல்லாஹ் عَزَّوَجَلَّ அவரை மன்னித்து விடுகிறான், ஆனால் துஆ கேட்பவன் அநியாயமாக வரி வசூலிப்பவனாகவோ, சூனியக் காரனாகவோ, ஜோதிடனாகவோ, இசை அமைப்பாளனாகவோ இருக்கக் கூடாது. பின்பு இவ்வாறு துஆ செய்யலானார்கள்–

اَللّٰهُمَّ رَبَّ دَاوٗدَ اغْفِرْ لِمَنْ دَعَاكَ فِيْ هٰذِهِ اللَّيْلَةِ اَوِ اسْتَغْفَرَكَ فِيْهَا

அதாவது: யா அல்லாஹ் عَزَّوَجَلَّ! தாவூதின் இரட்சகனே! யார் இன்றிரவு உன்னிடம் துஆ கேட்கிறார்களோ, அல்லது பாவமன்னிப்புக் கோருகிறார்களோ அவர்களை நீ மன்னித்து விடுவாயாக! (லதாஇஃபுல் மஆரிஃப் லிப்னே ரஜபில் ஹம்பலி, பாகம்–1, பக்கம்–137 சுருக்கம்)

ஆதரவற்றோர் பாவங்களை மன்னித்து விடுவாயாக
என் இறைவா! மன்னித்து அருளையும் புரிவாயாக

صَلُّوْا عَلَى الْحَبِيْب      صَلَّى اللهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

## பயனடையாத மக்கள்

இனிமையான இஸ்லாமிய சகோதரர்களே! பராஅத்துடைய இரவு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இரவாகும், எந்நிலையிலும் அதனை அலட்சியத்திலே கழித்து விடாதீர்கள். அன்றிரவு விஷேசமாக அருட்கொடை பொழிகிறது. இந்தப் புனிதமான இரவிலே அல்லாஹ் தபாரக வதஆலா “Bபனீகல்Bபுடைய” ஆடுகளின் உரோமங்களை விட அதிகமான மனிதர்களுக்கு நரகத்திலிருந்து விடுதலை அளிக்கிறான். கிதாபுகளில் எழுதப்பட்டுள்ளது, “Bபனீகல்Bப் எனும் குலத்தினர்” அராபிய குலங்களிலேயே மிக அதிகமாக ஆடுகளை வளர்ப்பவர்களாக இருந்தனர். (மிர்காத், பாகம்–3, பக்கம்–375) ஆஹ்! சில துர்பாக்கியசாலிகளுக்கு இந்த பராஅத்தின் அதாவது விடுதலை அளிக்கப்படும் இரவிலும் மன்னிப்பு அளிக்கப்படமாட்டாது என்று அச்சுறுத்தப்பட்டுள்ளது. ஹழ்ரத் ஸய்யிதுனா இமாம் பைஹகீ ஷாபிஈ عَلَيْهِ رَحْمَةُ اللّٰهِ الْقَوِی அவர்கள் “ஃபழாஇலுல் அவ்காத்” எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்கள், அண்ணல் நபி صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் படிப்பினையூட்டக்கூடிய அறிவிப்பு என்னவென்றால், ஆறு மனிதர் களுக்கு அன்றிரவும் மன்னிப்பு கிடைக்காது, (1) மது அருந்தும் பழக்க முடையவன், (2) தாய், தந்தையருக்கு கீழ்ப்படியாதவன், (3) விபச்சார பழக்கமுடையவன், (4) உறவுகளை முறிப்பவன், (5) உருவப்படம்

செய்பவன், மேலும் (6) கோள் மூட்டுபவன். (ஃபழாஇலுல் அவ்காத், பாகம்–1, பக்கம்–130, ஹதீஸ்–27) அதேபோல் ஜோதிடம் பார்ப்பவன், சூனியக் காரன், பெருமையுடன் காற்சட்டை அல்லது லுங்கியை கரண்டைக் காலுக்கு கீழே தொங்க விடுபவன் இன்னும் முஸ்லிம்களுடன் மார்க்க அனுமதியின்றி பகைமையை வைத்துக் கொள்பவன் மீதும் இந்த இரவிலே பாவமன்னிப்பின் பாக்கியம் கிடைக்காது என்று அச்சுறுத்தப்பட்டுள்ளது. எனவே அனைத்து முஸ்லிம்களும் செய்ய வேண்டிய விடயம் என்னவென்றால், மேற்கூறப்பட்ட பாவங்களில் مَعَاذَاللّٰه ஏதேனும் ஒரு பாவத்தில் சிக்கியிருந்தால் குறிப்பாக அந்தப் பாவத்தை விட்டும், பொதுவாக அனைத்து பாவங்களை விட்டும் **பராஅத்துடைய இரவு** வருவதற்கு முன்னரே, மாறாக இன்றே, இப்பொழுதே உண்மையான தௌபா செய்துக்கொள்ள வேண்டும். மேலும் அடியார்களின் உரிமைகளை மீறியிருந்தால் தௌபா செய்துக் கொள்வதோடு, மன்னிப்பை பெறவும் ஏற்பாடு செய்துக் கொள்ள வேண்டும்.

## அனைத்து முஸ்லிம்களுக்கும் இமாமே அஹ்லே சுன்னத் رَحْمَةُاللهِتَعَالٰى عَلَيْه அவர்களுடைய அறிவிப்பு

எனது எஜமானர் அஃலா ஹழ்ரத், இமாமே அஹ்லே சுன்னத், வலியே நிஃமத், அழீமுல் பரகத், முஜத்திதே தீனோ மில்லத், பீரே தரீகத், ஹனஃபி மத்ஹபின் மாபெரும் அறிஞரும், முஃப்தியுமான ஹழ்ரத் அல்லாமா மௌலானா அல்ஹாஜ் அல்ஹாபிழ் அல்காரி ஷாஹ் இமாம் அஹ்மத் ரZலாகான் عَلَيْهِ رَحْمَةُ الرَّحْمٰن அவர்கள் தனது சீடர் ஒருவருக்கு பராஅத்துடைய இரவுக்கு முன்னால், தௌபா மற்றும் மன்னிப்புக் கோருவது தொடர்பாக ஒரு கடிதம் எழுதியனுப்பி னார்கள், அதன்

பலனைக் கருத்தில் கொண்டு இங்கே குறிப்பிடுகி றேன். “குல்லிய்யாதே மகாதீBபே ரZஸா” எனும் நூலின் **356** முதல் **357**–வது பக்கம் வரை இது வந்துள்ளது: **பராஅத்துடைய இரவு** நெருங்கிக் கொண்டிருக்கிறது, அன்றிரவு அனைத்து அடியார்களின் அமல்களும் அல்லாஹ் عَزَّوَجَلَّ விடம் சமர்ப்பிக்கப்படுகிறது, அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் அன்பு நேசர், மறுமைநாளின் பரிந்துரையாளர் முஹம்மத் முஸ்தஃபா صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் பொருட்டால், அல்லாஹ் عَزَّوَجَلَّ முஸ்லிம்களுடைய பாவங்களை மன்னித்து விடுகிறான், ஆனால் ஒரு சிலரைத் தவிர! அதில் இரு முஸ்லிம்கள் யாரென்றால், உலகியல் காரணத்திற்காக உள்ளப் பகைமை கொண்டவர்கள். அவன் கூறுகிறான், “அவர்கள் தங்களுக்கிடையே சமாதானம் செய்து கொள்ளும் வரை அவர்களை விட்டு விடுங்கள்.” ஆகவே அஹ்லுஸ் சுன்னத்துடையவர்கள் இயன்றவரையில் ஷஃபான் **14**–வது நாள் சூரியன் மறைவதற்கு முன்னால் ஒருவர் மற்றவருடன் சமாதானமாகி விட வேண்டும். ஒருவர் மற்றவருடைய உரிமைகளை நிறைவேற்றி விடவேண்டும் அல்லது மன்னித்து விடவேண்டும். அமல்களின் பட்டோலை அடியார்களின் உரிமைகளை விட்டும் வெறுமையாக அந்த வல்லோனின் முன்னால் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இறைவனின் உரிமைக்காக உண்மையான தௌபாவே போதுமானதாகும். (பரிசுத்த ஹதீஸிலே வந்துள்ளது) ‘اَلتَّآئِبُ مِنَ الذَّنْبِ كَمَنْ لَّا ذَنْبَ لَهٗ’ (அதாவது– பாவத்தை விட்டும் தௌபா செய்துக் கொள்பவன் பாவமே செய்யாதவன் போலாகி விடுகிறான்.) (இப்னு மாஜா, ஹதீஸ்–4250) இப்படியான நிலையில் அல்லாஹ்வின் அனுமதியை கொண்டு நிச்சயமாக இந்த இரவிலே பாவமன்னிப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது, அகீதா உறுதியாக இருக்க வேண்டியது

அவசியமாகும். وَهُوَ الْغَفُوْرُ الرَّحِيْمُ (இன்னும் அவன் பாவங்களை மன்னிப்பவனும், அருள் பாலிப்பவனுமாவான்) இவையாவும், அதாவது சகோதரர்களிடையே சமாதானம் செய்வித்தலும், அல்லாஹ்வின் கிருபையால் உரிமைகளை மன்னித்தலும் இங்கே ஆண்டாண்டு காலமாக நடைபெற்று வருகிறது. நீங்களும் அங்குள்ள முஸ்லிம்களுக்கு மத்தியில் இதனை அறிமுகப்படுத்தி வைத்து,

مَنْ سَنَّ فِي الْاِسْلَامِ سُنَّةً حَسَنَةً فَلَهُ اَجْرُهَا
وَاَجْرُ مَنْ عَمِلَ بِهَا اِلٰى يَوْمِ الْقِيٰمَةِ لَايَنْقُصُ مِنْ اُجُوْرِهِمْ شَىْءٌ

(அதாவது, யார் இஸ்லாத்தில் நல்வழியை கண்டெடுக்கின்றாரோ அவருக்கு அதன் நன்மை உள்ளது. மேலும் கியாமநாள் வரை அதன் மீது யார் செயல்படுகிறார்களோ அவர்கள் அனைவருடைய நன்மையும் நிரந்தரமாக இவருடைய செயல் பதிவேட்டில் எழுதப்படும், செயல்படுவோரின் நன்மைகளில் குறைவு எதுவும் ஏற்படாது.) செயல்படுவீர்கள் என நம்பிக்கையுள்ளது. மேலும் இந்த எளியோனுக்காக மன்னிப்பு மற்றும் ஈருலக பாதுகாப்பிற்காகவும் துஆ செய்யுங்கள். இந்த எளியவன் உங்களுக்காக துஆ செய்கிறான், இன்னும் துஆ செய்வான். அங்கு (இறைவனின் சன்னிதியில்) வெறுமையான வார்த்தைகள் கவனிக்கப்படுவதில்லை, நயவஞ்சகமும் விருப்பமில்லை. சமாதானமும், மன்னிப்பும் தூய்மையான உள்ளத்துடன் இருக்க வேண்டும் என்பதை அனைத்து முஸ்லிம் மக்களுக்கும் அறிவித்து விடுங்கள்.

وَالسَّلَام

فقیر احمد رضا قادری عفی عنہ از بریلی

## ஷஃபான் பதினைந்தாவது நாளின் நோன்பு

ஹழ்ரத் ஸய்யிதுனா அலிய்யுல் முர்தழா كَرَّمَ اللّٰهُ تَعَالٰى وَجْهَهُ الْكَرِيْم அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது, கண்மணி நாயகம் صَلَّى اللّٰه تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் மகத்தான அறிவிப்பு என்னவென்றால், ஷஃபான் மாதத்தின் பதினைந்தாவது இரவு வந்தால் அதில் இபாதத் செய்யுங்கள், பகலிலே நோன்பு வையுங்கள், நிச்சயமாக அல்லாஹுதஆலா சூரியன் மறைந்ததிலிருந்து உலக வானிலே பிரகாசித்து, கூறுகிறான், “என்னிடம் மன்னிப்பு கோருபவர்கள் யாராவது இருக்கின்றார்களா, அவர்களை மன்னித்து விடுகிறேன்! உணவைத் தேடுபவர்கள் யாராவது இருக்கின்றார்களா, அவர்களுக்கு உணவை வழங்குகிறேன்! துன்பத்தால் பீடித்தவர்கள் யாராவது இருக்கின்றார்களா, அவர்களுக்கு பாதுகாப்பை வழங்குகிறேன்! யாராவது இருக்கின்றார்களா? யாராவது இருக்கின்றார்களா? இதை அவன் காலைப்பொழுது புலரும் வரை அறிவித்துக் கொண்டே இருக்கிறான்.” (சுனன் இப்னு மாஜா, பாகம்–2, பக்கம்–160, ஹதீஸ்–1388)

## பயனளிக்கும் விஷயம்

பராஅத் இரவில் அமல்களின் பட்டோலை மாற்றப்படுகின்றன. எனவே முடியுமானால் ஷஃபான் 14ஆம் நாளிலும் நோன்பு நோற்றுக் கொள்ளுங்கள். ஏனெனில் நமது அமல்களின் பட்டோலையில் கடைசி நாளன்றும் நோன்பு இருக்கட்டும். ஷஃபான் 14ஆம் நாள் அஸர் தொழுகையை ஜமாஅத்துடன் தொழுது விட்டு அங்கேயே நஃபிலான இஃதிகாஃபை செய்துக் கொள்வதோடு, மஃரிப் தொழுகையை எதிர்பார்க்கின்ற எண்ணத்துடன் பள்ளிவாசலிலேயே தங்கியிருங்கள். ஏனெனில் அமல்களின் பட்டோலை மாற்றம் அடைகின்ற கடைசி

தருணத்தில் பள்ளிவாசலுக்கு சமூகமளித்தல், இஃதிகாஃப், தொழுகையை எதிர்பார்த்திருத்தல் போன்றவற்றின் நன்மைகள் எழுதப்படட்டும். மாறாக இரவு முழுக்க இபாதத்திலே கழிக்கின்ற பாக்கியம் கிடைத்தால் நல்லது!

## பச்சை நிறச் சீட்டு

அமீருல் முஃமினீன் ஹழ்ரத் ஸய்யிதுனா உமர் பின் அப்துல் அZஸீஸ் رَضِيَ اللهُ تَعَالٰى عَنْهُ அவர்கள் ஒருமுறை ஷஃபான் மாதத்தின் பதினைந்தாவது இரவு அதாவது பராஅத்துடைய இரவு இபாதத்தில் ஈடுபட்டிருந்தார் கள். தலையை உயர்த்தியபோது "**பச்சை நிறச்சீட்டு**" ஒன்று கிடைத்தது, அதன் பிரகாசம் வானம்வரை பரவி இருந்தது. அதில், هٰذِهٖ بَرَاءَةٌ مِّنَ النَّارِ مِنَ الْمَلِكِ الْعَزِيْزِ لِعَبْدِهٖ عُمَرَ بْنِ عَبْدِالْعَزِيْزِ(அதாவது, மிகைத்தவனும், அதிபதியுமான இறைவனிடமிருந்து, இது "நரக நெருப்பை விட்டும் விடுதலைக்கான அனுமதிச் சீட்டாகும்" அவனுடைய அடியாரான உமர் பின் அப்துல் அZஸீஸ் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது) என்று எழுதப்பட்டிருந்தது. (தஃப்ஸீர் ரூஹுல் பயான், பாகம்–8, பக்கம்–402)

سُبْحٰنَ اللهِ عَزَّوَجَلَّ! இனிமையான இஸ்லாமிய சகோதரர்களே! இந்த சம்பவத்திலே அமீருல் முஃமினீன் ஹழ்ரத் ஸய்யிதுனா உமர் பின் அப்துல் அZஸீஸ் رَضِيَ اللهُ تَعَالٰى عَنْهُ அவர்களுடைய மேன்மையும், சிறப்பும் வெளிப்படுவதோடு பராஅத் இரவின் உயர்வும், மேன்மையும் கூட வெளிப்பட்டுள்ளது. اَلْحَمْدُ لِلّٰهِ عَزَّوَجَلَّ இந்தப் புனிதமான இரவு நரகத்தின் கொழுந்து விட்டெரிகின்ற நெருப்பை விட்டும் விடுதலைப் பெறுகின்ற

இரவாக இருக்கின்றது. அதனால் தான் இதற்கு பராஅத்துடைய இரவு என்று கூறப்பட்டுள்ளது.

## மஃரிப் தொழுகைக்குப் பின் ஆறு நஃபில்கள்

சங்கையான இறைநேசர்களின் رَحِمَهُمُ اللّٰهُ تَعَالٰى வழமையாக இருந்தது. அதாவது, மஃரிபுடைய ஃபர்ள் மற்றும் சுன்னத் போன்றவை களுக்குப் பின் **ஆறு ரக்அத் நஃபில்,** இரண்டு இரண்டு ரக்அத்தாக தொழுவது. **முதல்** இரண்டு ரக்அத்திற்கு முன்னால் இவ்வாறு நிய்யத் செய்ய வேண்டும்: "**யா அல்லாஹ்** عَزَّوَجَلَّ**!** இந்த இரண்டு ரக்அத்தின் பரகத்தைக் கொண்டு எனக்கு நலம் மிக்க நீண்ட ஆயுளை அளிப்பாயாக!" **இரண்டாவது** இரண்டு ரக்அத்திற்கு முன்னால் இவ்வாறு நிய்யத் செய்ய வேண்டும்: "**யா அல்லாஹ்** عَزَّوَجَلَّ**!** இந்த இரண்டு ரக்அத்தின் பரகத்தைக் கொண்டு துன்பங்களை விட்டும் என்னை பாதுகாப்பாயாக!" **மூன்றாவது** இரண்டு ரக்அத்திற்கு முன்னால் இவ்வாறு நிய்யத் செய்ய வேண்டும்: "**யா அல்லாஹ்** عَزَّوَجَلَّ**!** இந்த இரண்டு ரக்அத்தின் பரகத்தைக் கொண்டு உன்னைத் தவிர வேறு எவரிடமும் என்னை தேவையுடையவனாக ஆக்கி விடாதே!" இந்த ஆறு ரக்அத்திலும் சூரதுல் ஃபாத்திஹாவுக் குப் பின் நீங்கள் விரும்பிய சூராவை ஓதிக்கொள்ளலாம், விரும்பினால், ஒவ்வொரு ரக்அத்திலும் சூரதுல் ஃபாத்திஹாவுக்குப் பின் மூன்று மூன்று முறை சூரதுல் இக்லாஸை ஓதுங்கள். ஒவ்வொரு இரண்டு ரக்அத்திற்குப் பிறகும் 21 முறை قُلْ هُوَاللّٰهُ اَحَدٌ எனும் சூராவை (முழுமையாக) அல்லது ஒருமுறை சூரா யாஸீனை ஓதுங்கள். மாறாக, முடியுமானால் இரண்டையும் ஓதுங்கள். இவ்வாறும் செய்யலாம், அதாவது–

யாராவது ஓர் இஸ்லாமிய சகோதரர் உரத்த குரலில் சூரா யாஸீனை ஓத, மற்றவர்கள் மௌனமாக காது கொடுத்து கேட்க வேண்டும். இதில் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், அதை செவியுறும் மற்றவர்கள் நாவினால் யாஸீன் சூராவையோ அல்லது வேறு எதையுமோ ஓதக்கூடாது. மேலும் இந்த சட்டத்தை நன்கு நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். அதாவது, குர்ஆன் ஷரீஃப் உரத்த குரலில் ஓதப்படும்போது அதைக் கேட்பதற்காக குழுமியுள்ள மக்கள் அதனை மௌனமாக காது கொடுத்து கேட்க வேண்டியது கட்டாயக் கடமையாகும். اِنْ شَــآءَاللّٰه عَزَّوَجَلَّ இரவு ஆரம்பித்தவுடன் நன்மைகளின் குவியல் குவியத்துவங்கி விடும். ஒவ்வொரு முறை யாஸீன் சூராவை ஓதி முடித்ததும் ''**நிஸ்ஃபுஷ் ஷஃபானுடைய துஆவையும்**'' ஓதுங்கள்.

## சங்கையான ஷஃபான் மாதத்தின்15வது நாளின் துஆ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ وَالصَّلٰوةُ وَالسَّلَامُ عَلٰى سَيِّدِ الْمُرْسَلِيْن

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ ط بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ط

اَللّٰهُمَّ يَا ذَاالْمَنِّ وَلَا يُمَنُّ عَلَيْهِ ط يَا ذَاالْجَلَالِ وَالْاِكْرَامِ ط يَا ذَا الطَّوْلِ وَالْاِنْعَامِ ط لَآ اِلٰهَ اِلَّا اَنْتَ ظَهْرُ اللَّاجِيْنَ ط وَجَارُ الْمُسْتَجِيْرِيْنَ وَاَمَانُ الْخَآئِفِيْنَ ط اَللّٰهُمَّ اِنْ كُنْتَ كَتَبْتَنِىْ عِنْدَكَ فِىْٓ اُمِّ الْكِتٰبِ شَقِيًّا اَوْمَحْرُوْمًا اَوْمَطْرُوْدًا اَوْمُقَتَّرًا عَلَيَّ فِى الرِّزْقِ فَامْحُ اللّٰهُمَّ بِفَضْلِكَ شَقَاوَتِىْ وَحِرْمَانِىْ وَطَرْدِىْ وَاقْتِتَارِ رِزْقِىْ ط وَاَثْبِتْنِىْ عِنْدَكَ فِىْ اُمِّ الْكِتٰبِ سَعِيْدًا مَّرْزُوْقًا مُّوَفَّقًا لِّلْخَيْرَاتِ ط فَاِنَّكَ قُلْتَ وَقَوْلُكَ الْحَقُّ فِىْ كِتَابِكَ الْمُنَزَّلِ ط عَلٰى لِسَانِ نَبِيِّكَ الْمُرْسَلِ ط ﴿ يَمْحُوا اللّٰهُ مَا يَشَآءُ وَيُثْبِتُ ۚ وَعِنْدَهٗٓ اُمُّ الْكِتٰبِ ۝ ﴾ اِلٰهِىْ بِالتَّجَلِّى الْاَعْظَمِ ط فِىْ لَيْلَةِ النِّصْفِ مِنْ شَهْرِ شَعْبَانَ الْمُكَرَّمِ ط اَلَّتِىْ يُفْرَقُ فِيْهَا كُلُّ اَمْرٍ حَكِيْمٍ وَّيُبْرَمُ ط اَنْ تَكْشِفَ عَنَّا مِنَ الْبَلَاءِ وَالْبَلْوَاءِ مَا نَعْلَمُ وَمَا لَانَعْلَمُ ط وَاَنْتَ بِهٖ اَعْلَمُ اِنَّكَ اَنْتَ الْاَعَزُّ الْاَكْرَمُ ط وَصَلَّى اللّٰهُ تَعَالٰى عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِهٖ وَاَصْحَابِهٖ وَسَلَّمَ ط وَالْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝

யா அல்லாஹ் عَزَّوَجَلَّ! உபகாரம் செய்யக்கூடியவனே! எவர் மீது உபகாரம் செய்யப்படுவதில்லையோ, மேன்மையும் கீர்த்தியும் உடையவனே! அருளும் கொடையும் கொண்டவனே! உன்னைத்தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை. துயரம் கொண்டோருக்கு நீ உதவி புரிபவன், அடைக்கலம் தேடுவோருக்கு பாதுகாப்பும், அச்சம் கொண்டோருக்கு அபயமும் அளிப்பவன். யா அல்லாஹ் عَزَّوَجَلَّ! நீ உன்னிடமுள்ள உம்முல் கிதாபில் (அதாவது லௌஹுல் மஹ்ஃபூலில்) என்னை துர்பாக்கியசாலி, ஏமாற்றம் அடைந்தவன், இழிவானவன், ரிZஸ்கிலே மிக இறுக்கத்தைக் கொண்டவன் என்று எழுதியிருந்தால், அல்லாஹ்வே عَزَّوَجَلَّ! உனது அருளைக் கொண்டு எனது துர்பாக்கியத்தையும், இயலாத தன்மையையும், இழிவையும், ரிZஸ்கிலே உள்ள குறைபாட்டையும் அழித்து விடுவாயாக. மேலும் தன்னிடமுள்ள உம்முல் கிதாபில் என்னை நற்பாக்கியசாலியாக, நிறைவான ரிZஸ்க் அளிக்கப்பட்டவனாக, நன்மைகளின் பாக்கியம் பெற்றவனாக பதித்து விடுவாயாக. ஏனெனில் நீ இறக்கிய வேதத்திலே, நீயே அனுப்பிய உனது தூதருடைய அருள்மிக்க மொழியிலே அறிவித்துள்ளாய், மேலும் உனது இந்த அறிவிப்பு மிகவும் சத்தியமானது. (கன்ஸுல் ஈமானின் பொருள்: “அல்லாஹ் தான் நாடியதை அழிக்கிறான், தான் நாடியதை உறுதிப்படுத்துகிறான், இன்னும் எழுதப்பட்டுள்ள அசல் அவனிடமே உள்ளது.”) (ஜுஸ்உ 13, அர்ரஅத்: 39) இறைவனே! மகத்துவ மிக்க தஜல்லியின் பொருட்டால் ஷஃபானுல் முகர்ரமின் இரவில் (அதாவது ஷபே பராஅத்தில்) எல்லாவற்றையும் பங்கிடப்படுகிறது, ஒவ்வொரு நுட்பமான காரியமும் உறுதியாக்கப்பட்டு விடுகிறது. (யா அல்லாஹ்!) நாங்கள் அறிந்தும் அறியாமலும் இருக்கின்ற

ஆபத்துக்களை விட்டும் எங்களை தூரமாக்குவாயாக, நீயே அவற்றை நன்கு அறிந்தவனாக இருக்கின்றாய். நிச்சயமாக நீயே அனைவரையும் விட அன்புடையோனும், கண்ணியமுடையவனுமாகும். எங்கள் தலைவர் முஹம்மத் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் மீதும், அன்னவர்களின் குடும்பத்தினர் மற்றும் தோழர்கள் மீதும் (رَضِيَ اللهُ تَعَالٰى عَنْهُم) அல்லாஹுதஆலா ஸலவாத்தும், ஸலாமும் அனுப்புவானாக. எல்லாப் புகழும் அனைத்துலகையும் பரிபாலிக்கின்ற அல்லாஹ் عَزَّوَجَلَّ வுக்கே உரியதாகும்.

## ஸGகே மதீனா عُفِيَ عَنْهُ வின் மதனி வேண்டுகோள்

اَلْحَمْدُ لِلّٰه عَزَّوَجَلَّ! ஸGகே மதீனா عُفِيَ عَنْهُ அவர்களுக்கு ஆண்டாண்டு காலமாக பராஅத்துடைய இரவில் மேலே கூறப்பட்ட முறைப்படி நஃபிலான ஆறு ரக்அத்துக்கள் மற்றும் ஓதல்கள் போன்றவைகளை செய்யும் பழக்கம் இருந்து வருகிறது. மஃரிபுக்குப் பின் செய்கின்ற இந்த இபாதத் நஃபிலானது, பர்ளோ வாஜிபோ அல்ல. மேலும் மஃரிப் தொழுகைக்குப் பின் நஃபில்கள் மற்றும் ஓதுதல்களுக்கு ஷரீஅத்திலே எந்தவித தடையும் கிடையாது. ஹழ்ரத் அல்லாமா இப்னு ரஜப் ஹம்பலி عَلَيْهِ رَحْمَةُ اللّٰهِ الْقَوِى அவர்கள் எழுதுகிறார்கள்– ஷாம் வாசிகளில் மேன்மைமிக்க தாபிஈன்களான ஹழ்ரத் ஸய்யிதுனா காலித் பின் மஅதான், ஹழ்ரத் ஸய்யிதுனா மக்ஹூல், ஹழ்ரத் ஸய்யிதுனா லுக்மான் பின் ஆமிர் رَحِمَهُمُ اللّٰهُ تَعَالٰى போன்றவர்கள் பராஅத்துடைய இரவை மிகவும் கண்ணியப்படுத்தியதோடு, அதில் நிறைய இபாதத்துக்களை செய்து வந்தார்கள். அவர்களைக் கொண்டே மற்ற முஸ்லிம்களும் இப்புனித இரவை கண்ணியப்படுத்த கற்றுக் கொண்டார்கள். (லதாஇஃபுல்

மஆரிஃப், பாகம்–1, பக்கம்–145) ஹனஃபி சட்டத்தின் நம்பகமான நூலான "துர்ரே முக்தாரில்" குறிப்பிடப் பட்டுள்ளது, பராஅத்துடைய இரவிலே விழித்திருந்து இபாதத் செய்வது விரும்பத்தக்கதாகும். (முழு இரவும் விழித்திருப்பதை மட்டுமே இரவில் விழித்திருந்து என்று கூறுவதில்லை.) இரவின் பெரும்பாலான பகுதியில் விழித்திருப்பதும் இரவு விழிப்பு என்பதே ஆகும். (துர்ரெ முக்தார், பாகம்–2, பக்கம்–568/பஹாரே ஷரீஅத், பாகம்–1, பக்கம்–679) **மதனி வேண்டுகோள்:** முடியுமானால் அனைத்து இஸ்லாமிய சகோதரர்களும் தத்தமது பள்ளிவாசல்களில் மஃரிப் தொழுகைக்குப் பின் ஆறு ரக்அத் நஃபில் போன்றவற்றை ஏற்பாடு செய்து, ஏராளமான நன்மைகளை பெற்றுக்கொள்ளுங்கள். இஸ்லாமிய சகோதரிகள் தத்தமது வீடுகளில் இந்த அமல்களை செய்துக் கொள்ளுங்கள்.

## *முழு வருடமும் சூனியத்தை விட்டும் பாதுகாப்பு*

தஃவதே இஸ்லாமியின் பதிப்பகமான மக்தBபதுல் மதீனாவினால் அச்சிடப்பட்ட 170 பக்கங்கள் அடங்கிய "இஸ்லாமி Zஸிந்தகி" எனும் நூலின் 134–வது பக்கத்தில் வந்துள்ளது, இந்த இரவு (பராஅத் இரவு) பேரியின் (பேரிக்காய் மரத்தின்) ஏழு இலைகளை தண்ணீரிலே விட்டு கொதிக்க வைத்து, (தண்ணீர் குளிக்கக்கூடிய நிலைக்கு வந்து விட்டால்) குளித்துக் கொள்ளுங்கள். إِنْ شَآءَ اللّٰه عَزَّوَجَلَّ முழு வருடமும் சூனியத்தின் பாதிப்பை விட்டும் பாதுகாப்பாக இருப்பார்.

## *பராஅத் இரவும், கப்ருகளின் தரிசனமும்*

ஹழ்ரத் ஸய்யிததுனா ஆயிஷா சித்தீகா رَضِیَ اللّٰهُ تَعَالٰی عَنْهَا அவர்கள் அறிவிக்கிறார்கள். நான் ஒருநாள் இரவு பிரபஞ்சங்களின் தலைவர்,

படைப்பினங்களின் பேரரசர், அண்ணல் நபி صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களைக் காணவில்லை, அன்னவர்களை புனித பகீயிலே சந்தித்தேன். அப்போது அண்ணலவர்கள் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم என்னிடம், அல்லாஹ் عَزَّوَجَلَّ வும், அவனுடைய தூதரும் உமது உரிமையை பறித்துக் கொள்வார்கள் என்று நீர் பயந்து விட்டீரா? என கேட்டார்கள். அதற்கு நான், யா ரசூலல்லாஹ் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களே! சிலவேளை தூய்மைமிக்க மனைவியரில் யாரேனும் ஒருவரிடம் தாங்கள் சென்றிருப்பீர்கள் என்று நினைத்தேன். என கூறினேன், அதற்கு அன்னவர்கள், “நிச்சயமாக அல்லாஹுதஆலா ஷஃபான் மாதத்தின் பதினைந்தாவது இரவில் உலக வானிலே பிரகாசித்து, Bபனீகல்Bப் கோத்திரத்தாருடைய ஆடுகளின் உரோமங்களை விட அதிகமாக பாவிகளை மன்னித்து விடுகிறான்.” எனக் கூறினார்கள். (சுனன் திர்மிதி, பாகம்–2, பக்கம்–183, ஹதீஸ்–739)

## பட்டாசுகளை கண்டுபிடித்தவன் யார்?

இனிமையான இஸ்லாமிய சகோதரர்களே! اَلْحَمْدُ لِلّٰه عَزَّوَجَلَّ பராஅத் துடைய இரவு என்பது நரக நெருப்பிலிருந்து “பராஅத்” அதாவது விடுதலை பெறுகின்ற இரவாகும். ஆனால் கைசேதம் என்னவென் றால், முஸ்லிம்களின் பெரும்பாலானவர்கள் நெருப்பை விட்டும் விடுதலை பெறுவதற்கு பதிலாக தானாக செலவு செய்து நெருப்பை அதாவது **வானவெடிப்** பொருட்களை வாங்கி, பட்டாசு வகைகளை வெடித்து இப்புனித இரவின் புனிதத்தை பாழாக்கி விடுபவர்களாக உள்ளனர். புகழ்பெற்ற விரிவுரையாளர், ஹகீமுல் உம்மத் ஹழ்ரத் முஃப்தி அஹ்மத் யார்கான் عَلَيْهِ رَحْمَةُ الْحَنَّان அவர்கள் தனது “இஸ்லாமி Zஸிந்தகி” எனும் சிறுநூலில் குறிப்பிட்டுள்ளார்கள். “அன்றைய

இரவை பாவத்திலே கழிப்பது மிகப்பெரிய துர்பாக்கியமாகும். வானவெடிகளைப் பற்றி பிரபல்யமான கருத்து என்னவென்றால், அது நம்ரூத் அரசனால் ஆரம்பிக்கப்பட்டது என்று கூறப்படுகிறது. அவனே ஹழ்ரத் ஸய்யிதுனா இப்றாஹீம் عَلٰی نَبِیِّنَا وَعَلَیْہِ الصَّلٰوۃُ وَالسَّلَام அவர்களை நெருப்பிலே போட்டான், அது பூஞ்சோலையாக மாறி விட்டது. அப்போது அந்த அரசனுடைய ஆட்கள் நெருப்புப் பொறிகளை நிரப்பி, அதில் நெருப்பை மூட்டி ஹழ்ரத் ஸய்யிதுனா இப்றாஹீம் عَلٰی نَبِیِّنَا وَعَلَیْہِ الصَّلٰوۃُ وَالسَّلَام அவர்களின் மீது வீசினார்கள்.” (இஸ்லாமி Zஸிந்தகி, பக்கம்–76)

## பராஅத்துடைய இரவில் நடைபெறும் பட்டாசுகள் ஹராமாகும்

**கைசேதம்!** பராஅத்துடைய இரவில் வானவெடிகளின் வெறுக்கத்தக்க சம்பிரதாயம் இப்போது முஸ்லிம்களுக்குள்ளே வேரூன்டியுள்ளது. “இஸ்லாமி Zஸிந்தகி” யில் குறிப்பிடப்பட்டுள்ளது, முஸ்லிம்களின் இலட்சக்கணக்கான பணம் ஒவ்வொரு வருடமும் இதில் வீணாகி விடுகின்றது. மேலும் குறிப்பிட்ட இடத்தில் பட்டாசு வகைகளின் காரணத்தினால் இத்தனை வீடுகள் எரிந்து விட்டன என்றும், இத்தனை மனிதர்கள் தீக்கிறையாகி விட்டனர் என்றும் ஒவ்வொரு வருடமும் செய்தி வந்து கொண்டுதான் இருக்கிறது. இதில் உயிர் போகும் ஆபத்து மட்டுமின்றி பொருட்களின் நாசம் மற்றும் வீடுகள் தீக்கிறையாகி விடும் ஆபத்துகளும் உள்ளன. (அதேபோல்) தனது பணத்தை தன் கையாலேயே தீ வைத்து, பின்பு இறைவனுடைய அடிபணியாமையின் வேதனையை தங்கள் தலைமீது போட்டுக் கொள்வது. அல்லாஹ்வுக்காக இந்த ஒழுக்கமற்ற மற்றும் **ஹராமான**

**காரியத்தை** விட்டு விடுவதோடு, தமது பிள்ளைகளையும், உறவினர்களையும் அதை விட்டும் தடுத்து நிறுத்துங்கள். ஒழுக்கமற்ற சில பிள்ளைகள் அந்த விளையாட்டில் ஈடுபட்டிருந்தால் அதை வேடிக்கை பார்க்கவும் கூட அருகில் செல்லாதீர்கள். (இஸ்லாமி Zஸிந்தகி, பக்கம்–76) (பராஅத்துடைய இரவில் நடைபெறும்) வானவெடிகள் நிச்சயமாக வீண் செலவும், வீண்விரயமுமாகும். எனவே இது அனுமதிக்கப்படாததும், ஹராமானதும், மேலும் அதேபோல் வானவெடிகளைத் தயாரிப்பதும், அவற்றை விற்பது, வாங்குவது அனைத்தும் ஷரீஅத்தில் தடைசெய்யப்பட்டுள்ளது. (ஃபதாவா அஜ்மலியா, பாகம்–4, பக்கம்–52) எனது எஜமான், அஃலா ஹழ்ரத், இமாமே அஹ்லே சுன்னத், மௌலானா ஷாஹ் இமாம் அஹ்மத் ரZஸாகான் عَلَيْهِ رَحْمَةُ الرَّحْمٰن அவர்கள் அறிவிக்கின்றார்கள். திருமண வைபவங்கள் மற்றும் பராஅத்துடைய இரவில் நடைபெற்று வரும் வானவெடிகள் நிச்சயமாக ஹராமும், அவை முழுக்க முழுக்க குற்றமுமாகும். ஏனெனில், அதில் சொத்துக்கள் வீணடைகின்றன. (ஃபதாவா ரZஸவிய்யா, பாகம்–23, பக்கம்–279)

## பட்டாசுகள் ஆகுமான முறைகள்

பராஅத்துடைய இரவில் நடைபெற்றுவரும் பட்டாசுகளின் நோக்கம் வீண் விளையாட்டு மற்றும் பொழுதுபோக்காக இருப்பதால் அது குற்றமும், ஹராமும், மேலும் நரகத்திற்கு இட்டுச் செல்லும் காரியமுமாகும். ஆனால் இதன் ஆகுமான சில முறைகளும் உள்ளன. எவ்வாறெனில், அஃலா ஹழ்ரத் رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்களுடைய சன்னிதானத்தில் கேட்கப்பட்டது, பட்டாசுகளை உண்டாக்குவதும், அதனை வெடிக்கச் செய்வதும் ஹராமா, இல்லையா? இது தொடர்பாக மார்க்க அறிஞர்கள் என்ன கூறுகின்றார்கள்?

பதில்: அது தடுக்கப்பட்டதும், பாவமுமாகும். ஆனால் (பொதுவாக) அதை வெறும் விளையாட்டாகவும், வீண் செலவாகவும் செய்யாமல் இருந்தால் அது ஆகுமானதாகும். உதாரணமாக பிறையைப் பார்த்து அதனை அறிவிப்பதற்காக அல்லது காட்டிலோ, தேவைப்பட்டால் நகரத்திலும் கேடு விளைவிக்கின்ற விலங்குகளை விரட்டுவதற்காக அல்லது வயல்களிலிருந்தும், கனிகளைக் கொண்ட மரங்களிலிருந் தும் மிருகங்களை (இன்னும் பறவைகளை) விரட்டுவதற்காகவும் தீப்பொறிகளையும், பட்டாசுகளையும், தீப்பந்தங்களையும் விடலாம். (ஃபதாவா ரZஸவிய்யா, பாகம்–23, பக்கம்–290)

மகிமைமிக்க ஷஃபானின் பொருட்டால் இறைவா!
மன்னித்துவிடு எனது அனைத்து பாவங்களை இறைவா!

صَلُّوْا عَلَى الْحَبِيْب صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

பராஅத் இரவுடைய இபாதத்தின் உணர்வை அதிகரிக்கவும், இப்புனித இரவிலே பட்டாசுகள் மற்றும் ஏனைய பாவங்களை விட்டு மீளவும் மேலும் தன்னை நல்லொழுக்கமுள்ள முஸ்லிமாக ஆக்கிக் கொள்ளவும், குர்ஆன் மற்றும் சுன்னத்துக்களை போதிக்கின்ற அரசியலற்ற உலகளாவிய அமைப்பான **தஃவதே இஸ்லாமியின்** மதனி சூழலுடன் எந்நேரமும் இணைந்திருங்கள். ஒவ்வொரு மாதமும் குறைந்தபட்சம் மூன்று நாட்கள் **நாயகத்தின் ஆஷிகீன்களுடன்** மதனி காஃபிலாவிலே சுன்னத்துக்கள் நிறைந்த பயணத்தை மேற்கொள்வதோடு, **மதனி இன்ஆமாத்** பிரகாரம் வாழ்வதற்கு முயற்சி செய்யுங்கள். உங்களுக்கு ஆர்வமூட்டுவதற்கும், பேராசை உண்டாகுவதற்கும் இரண்டு மதனி வசந்தங்கள் குறிப்பிடப்படு கின்றன.

## (1) பராஅத் இரவின் இஜ்திமாவினால் என் உள்ளம் மாற்றமடைந்தது

மர்கZஸூல் அவ்லியா (லாஹுர்) வை சேர்ந்த ஓர் இஸ்லாமிய சகோதரருடைய கடிதத்தின் வார்த்தைகள். அதாவது, அல்குர்ஆன் மற்றும் சுன்னத்துக்களை போதிக்கின்ற அரசியலற்ற உலகளாவிய அமைப்பான தஃவதே இஸ்லாமியின் “மதனி சூழலுடன்” இணைவதற்கு முன், مَعَاذَ اللّٰه عَزَّوَجَلَّ தீய கொள்கையுடையோரின் தோழமையில் இருக்கும் மிகப்பெரிய பாவத்தை செய்து வந்ததுடன், ஏனைய பல்வேறு பாவங்களின் சூழலிலும் சிக்கிக் கொண்டிருந்தேன். மிகவும் வருத்தமான விஷயம் என்னவென்றால், இரவு, பகலாக சினிமா, நாடகம் பார்ப்பது, மானக்கேடான தலங்களை பார்த்து வருவது مَعَاذَ اللّٰه عَزَّوَجَلَّ எனக்கு மிகப் பெருமையான விஷயமாக இருந்தது. என்னுடைய பாவங்கள் நிறைந்த மோசமான மாலையின் இறுதியும், நன்மைகள் நிறைந்த விடிகாலை வசந்தத்தின் ஆரம்பத்திற்குரிய காரணங்களும் இவ்வாறு அமைந்தது. அதாவது ஓர் இஸ்லாமிய சகோதரருடைய தனித்துவ முயற்சியின் பரகத்தால், “ஹின்ஜர்வால்” எனும் இடத்தில் பராஅத்துடைய இரவு நடைபெற்ற சுன்னத்துக்கள் நிறைந்த இஜ்திமாவில் கலந்து கொள்ளும் பாக்கியம் எனக்கு கிடைத்தது. தஃவதே இஸ்லாமியின் முபல்லிஹ் (அழைப்பாளர்) உடைய சொற்பொழிவு எந்தளவு கவலையை தூண்டுவதாக காணப்பட்டதென்றால், நான் எனது பாவங்களை நினைத்து வெட்கத்தால் கூனிக்குறுகி விட்டேன். அல்லாஹ் عَزَّوَجَلَّ வுடைய கோபத்தை நினைத்து எனக்கு எந்தளவு அச்சம் ஏற்பட்ட தென்றால், என் கண்களிலிருந்து கண்ணீர் வெள்ளம் பெருக்

கெடுத்தோட ஆரம்பித்து விட்டது. இஜ்திமாவின் இறுதியில் எங்கள் பகுதியைச் சார்ந்த “மதனி காஃபிலாவின் பொறுப்பாளரான” இஸ்லாமிய சகோதரர் என்னை சந்தித்து, மூன்று நாட்களுக்கான மதனி காஃபிலாவிலே பயணத்தை மேற்கொள்ளுமாறு எனக்கு ஊக்கமளித்தார். என் உள்ளம் ஏற்கனவே காயப்பட்டிருந்ததால் அவரது தனித்துவ முயற்சியின் முடிவில் நான் மதனி காஃபிலாவின் பயணியாகி விட்டேன். மதனி காஃபிலாவில் **நாயகத்தின் ஆஷிகீன் களுடைய** பாசம் நிறைந்த தோழமையிலே இருந்து, நான் எண்ணற்ற சுன்னத்துக்களை கற்றுக்கொள்ளும் பாக்கியத்தைப் பெற்றேன். اَلْحَمْدُ لِلّٰه عَزَّوَجَلَّ, எனது முன்னைய பாவங்கள் அனைத்தையும் விட்டு நான் தௌபா செய்து கொண்டதுடன், **முபாரக்கான ரமழான்** மாதம் வருகை தந்தபோது **நாயகத்தின் ஆஷிகீன்களுடன்** நானும் கடைசி பத்து நாட்கள் **இஃதிகாஃப்** இருக்கும் பாக்கியத்தை பெற்றேன். அந்த **இஃதிகாஃபின்** இருபத்தேழாம் இரவன்று பாக்கியசாலியான ஓர் இஸ்லாமிய சகோதரருக்கு ஈருலக அருளாளர், ஒளி வடிவானவர், அண்ணல் நபி صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களை தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தது. இந்த விடயம் என்னுடைய உள்ளத்தில் **தஃவதே இஸ்லாமியின்** அன்பை மேலும் அதிகப்படுத்தி விட்டது. ஆகவே நான் முழுமையாக தஃவதே இஸ்லாமியின் மதனி சூழலுடன் ஒன்றி விட்டேன்.

நற்செயல்கள் பல புரிவீர்கள் வாருங்கள்
மதனி சூழலில் இஃதிகாஃபைச் செய்யுங்கள்
மார்க்க மாமன்னரின் தரிசனமும் கிடைத்திடும்
மதனி சூழலில் இஃதிகாஃபைச் செய்யுங்கள்

சோக மனமும் மகிச்சியால் குதித்திடும்
மதனி சூழலில் இஃதிகாஃபைச் செய்யுங்கள்

صَلُّوْا عَلَى الْحَبِيْب     صَلَّى اللهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

## (2) சினிமாவின் இழிவு

பாபுல் மதீனா (கராச்சி) வின் ஒரு பகுதியான “Bபடாபோர்ட்” ஐ சேர்ந்த ஓர் இஸ்லாமிய சகோதரருடைய பயானின் சுருக்கம் இது. ஆரம்பத்தில் நான் சமுதாயத்தின் கேடுகெட்ட ஓர் இளைஞனாக இருந்தேன். தினமும் தொடர்ந்து சினிமா, நாடகம் பார்க்கும் காரணத்தால் எங்கள் பகுதியிலே நான் “சினிமாப் பொறுக்கி” எனும் பெயரால் புகழ்பெற்றிருந்தேன். எனது தௌபாவிற்கான காரணம் இதுவாகும். அதாவது, ஓர் இஸ்லாமிய சகோதரரின் தனித்துவ முயற்சியைக் கொண்டு “கஜ்ஜி கிரவுண்ட் (Gகுல்பஹார், பாபுல் மதீனா)” எனும் இடத்தில் குர்ஆன் மற்றும் சுன்னத்துக்களை போதிக்கின்ற அரசியலற்ற உலகளாவிய அமைப்பான தஃவதே இஸ்லாமியினால் ஏற்பாடு செய்யப்பட்ட பராஅத் இரவின் சுன்னத் துக்கள் நிறைந்த இஜ்திமாவிலே கலந்துக் கொள்ளும் பாக்கியம் கிடைத்தது. அங்கே நான் “கப்ர் கி பெஹ்லி ராத்” (கப்ரின் முதல் இரவு) எனும் தலைப்பில் அழுகையை ஏற்படுத்தும் சொற்பொழிவைக் கேட்டபோது, **அல்லாஹ்** عَزَّوَجَلَّ **வின் அச்சத்தால்** உள்ளம் நடுநடுங்கி விட்டது. நான் முன்னைய பாவங்களை விட்டும் தௌபா செய்து, **தஃவதே இஸ்லாமியின்** மதனி சூழலுடன் இணைந்துக் கொண்டேன். எங்கள் குடும்பத்தினர் அனைவரும் நவநாகரீகத்தில் இருந்தார்கள். اَلْحَمْدُ لِلّٰه عَزَّوَجَلَّ என்னுடைய **தனித்துவ முயற்சியைக்** கொண்டு எனது

ஐந்து சகோதரர்களும் **தஃவதே இஸ்லாமியினராகி**, அனைவரும் தலையிலே தலைப்பாகை எனும் கிரீடத்தை அணிந்துக் கொண்டார் கள். மேலும் வீட்டிற்குள்ளே மதனி சூழல் ஏற்பட்டு விட்டது. இதை எழுதும் நேரத்தில் பகுதி முஷாவரத்தின் (ஆலோசனைக் குழுவின்) பணியாளனாக சுன்னத்துக்களின் பணி புரிந்து வருகிறேன். எனக்கு சுன்னத்துக்களின் பயிற்சிக்கான மதனி காஃபிலாக்களில் பயண மேற்கும் ஆர்வம் மிகுந்துள்ளது. اَلْحَمْدُ لِلّٰه عَزَّوَجَلَّ ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து மூன்று நாட்கள் **நாயகத்தின் ஆஷிகீன்களுடன்** மதனி காஃபிலாவிலே பயணம் செய்கிறேன்.

நிச்சயம் அவரே தன் விதியின் வேந்தர்
எவருக்கு கிடைத்ததோ மதனி சூழல்
சுன்னாக்களை இங்கே கற்றுத் தேரலாம்
இறைச்சத்தை தந்திடும் மதனி சூழல்
இங்கே வந்துவிடு பாவங்களின் நோயாளியே
பாவங்களுக்கு மருந்தளிக்கும் மதனி சூழல்

صَلُّوْا عَلَى الْحَبِيْب     صَلَّى اللهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

இனிமையான இஸ்லாமிய சகோதரர்களே! பயானை முடிக்கின்ற இந்த நேரத்தில் சுன்னத்துக்களின் சிறப்புக்களையும், மேலும் சில சுன்னத்துக்களையும், ஒழுக்கங்களையும் உங்களுக்கு எடுத்துக் கூறுகிறேன். தூதுத்துவ மாமன்னர், நபித்துவ பேரரசர், இறைவனின் அன்பு நேசர் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் அறிவித்துள்ளார்கள். “யார் என்னுடைய சுன்னாவை நேசிக்கின்றாரோ அவர் என்னை

நேசிக்கின்றார், யார் என்னை நேசிக்கின்றாரோ அவர் சுவனத்தில் என்னுடன் இருப்பார். (இப்னு அஸாகிர், பாகம்–9, பக்கம்–343)

எஜமானரே! என் உள்ளம் உமது சுன்னாவின் பட்டணமாகட்டும்
சுவனத்தில் அயல்வீட்டாளனாக எனையாக்க வேண்டும்

صَلُّوْا عَلَى الْحَبِيْب صَلَّى اللهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

## “கண்ணியமிக்க ஷஃபான்” என்பதிலுள்ள 11 எழுத்துக்களின் தொடர்பில் கப்ருஸ்தானுக்கு சமூகமளிக்கும் 11 மதனி முத்துக்கள்

1) கண்மணி நாயகம், ரசூலே அக்ரம் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் அறிவித்துள்ளார்கள். நான் உங்களை கப்ருகளை தரிசிப்பதை விட்டும் தடுத்திருந்தேன், இப்போது நீங்கள் கப்ருகளை தரிசியுங்கள், ஏனெனில் அது உலகப்பற்றுதலை இல்லாமல் ஆக்குவதற்கு காரணமாகவும் மேலும் மறுமையை நினைவூட்டுவதாகவும் ஆகிறது. (சுனன் இப்னு மாஜா, பாகம்–2, பக்கம்–252, ஹதீஸ்–1571)

2) (வலிமார்களின் தர்ஹாக்கள் அல்லது) எந்தவொரு முஸ்லிமுடைய கப்ரை தரிசிக்க செல்வதாக இருந்தாலும் முஸ்தஹப்பான (விரும்பத்தக்க) முறை என்னவென்றால், முதலில் தனது இடத்தில் (மக்ரூஹ் அல்லாத நேரத்தில்) இரண்டு ரக்அத் நஃபில் தொழ வேண்டும். ஒவ்வொரு ரக்அத்திலும் சூரதுல் ஃபாத்திஹா ஓதிய பிறகு ஒருமுறை ஆயதுல் குர்ஸியும், மூன்று முறை சூரதுல் இக்லாஸும் ஓதுவதோடு, அந்த தொழுகையின் நன்மையை கப்ரிலே உள்ளவருக்கு சேர்ப்பித்து விடவேண்டும்.

அல்லாஹுதஆலா மரணித்த அந்த நபருடைய கப்ரிலே ஒளியை உண்டாக்குவான். மேலும் இந்த (நன்மையை சேர்ப்பிக்கும்) மனிதனுக்கு அதிகமான நன்மைகளை வழங்கி விடுகிறான். (ஃபதாவா ஆலம்கீரி, பாகம்–5, பக்கம்–350)

3) தர்ஹா அல்லது கப்ரை தரிசிக்க செல்லும் வழியில் வீண் பேச்சுக்களில் ஈடுபட வேண்டாம். (ஃபதாவா ஆலம்கீரி, பாகம்–5, பக்கம்–350)

4) முன்னர் எப்போதுமே முஸ்லிம்களின் கப்ருகள் இருக்காத பொதுவான வழியின் மூலமாக கப்ருஸ்தானுக்குச் செல்லுங்கள். புதிதாக பாதை அமைக்கப்பட்டிருந்தால் அதன் மீது செல்லாதீர் கள். "ரத்துல் முஹ்தாரில்" வந்துள்ளது, (கப்ருஸ்தானில் கப்ருகளை மறைத்து) புதிய பாதை அமைக்கப்பட்டிருந்தால் அதன் மீது நடப்பது ஹராமாகும். (ரத்துல் முஹ்தார், பாகம்–1, பக்கம்–612) மாறாக, அப்புதிய பாதையின் மீது சந்தேகம் பெரும்பாலும் இருந்தாலும் அதன் மீது நடப்பது அனுமதிக்கப்படாததும், குற்றமுமாகும். (துர்ரெ முக்தார், பாகம்–3, பக்கம்–183)

5) பல அவ்லியாக்களின் தர்ஹாக்களில், தரிசிக்க வருவோரின் வசதிக்காக முஸ்லிம்களின் கப்ருகளை உடைத்து தரைமட்ட மாக்கப்பட்டுள்ளது. அத்தகைய தரையிலே படுப்பது, நடப்பது, நிற்பது, குர்ஆன் ஓதுவதற்காக அல்லது திக்ர் செய்வதற்காக அமர்வது போன்றவைகள் ஹராமாகும். தூரமாக நின்றே ஃபாத்திஹா ஓதிக்கொள்ளுங்கள்.

6) கப்ருகளை அதில் அடக்கப்பட்டிருப்போரின் முகத்துக்கு நேரே நின்று தரிசிக்க வேண்டும். அவரது பார்வை உங்கள் பக்கம் படும்படியாக அவருடைய காலடியின் பக்கமாகச் செல்ல

வேண்டுமே தவிர, அவர் தலையெடுத்துப் பார்க்கும்படியாக அவரது தலைமாட்டுப் பக்கமாக செல்லக் கூடாது. (ஃபதாவா ரZஸவிய்யா முகர்ரஜா, பாகம்–9, பக்கம்–532)

7) கப்ருஸ்தானிலே இவ்வாறு நிற்க வேண்டும், அதாவது முதுகு கிப்லாவை நோக்கியும், முகம் கப்ர் வாசிகளின் முகத்தை நோக்கியும் இருக்க வேண்டும். அதன் பின்னர் இவ்வாறு கூறவேண்டும்:

اَلسَّلَامُ عَلَيْكُمْ يَااَهْلَ الْقُبُوْرِ يَغْفِرُ اللهُ لَنَا وَلَكُمْ اَنْتُمْ لَنَا سَلَفٌ وَّنَحْنُ بِالْاَ ثَرِ

பொருள்: கப்ர் வாசிகளே! உங்கள் மீது ஸலாம் உண்டாவதாக, அல்லாஹ் عَزَّوَجَلَّ எங்களையும், உங்களையும் மன்னித்து விடுவானாக. நீங்கள் எங்களுக்கு முன்னால் வந்து விட்டீர்கள், இன்னும் நாம் உங்களுக்கு பின்னால் வர இருக்கின்றோம். (ஃபதாவா ஆலம்கீரி, பாகம்–5, பக்கம்–350)

8) யார் கப்ருஸ்தானில் நுழையும்போது இவ்வாறு கூறுகிறாரோ,

اَللّٰهُمَّ رَبَّ الْاَجْسَادِ الْبَالِيَةِ وَالْعِظَامِ النَّخِرَةِ الَّتِى خَرَجَتْ مِنَ الدُّنْيَا وَهِىَ بِكَ مُؤْمِنَةٌ اَدْخِلْ عَلَيْهَا رُوْحًا مِنْ عِنْدِكَ وَسَلَامًا مِّنِّىْ

(பொருள்: யா அல்லாஹ் عَزَّوَجَلَّ! வெந்து போகும் உடல் மற்றும் சிதைந்து போகும் எலும்புகளின் இறைவனே! உலகத்திலிருந்து ஈமானுடைய நிலையில் எவர்கள் விடைபெற்று சென்று விட்டனரோ அவர்களின் மீது உனது அருளையும், எனது ஸலாமையும் சேர்ப்பித்து விடுவாயாக.) அவருக்காக ஹழ்ரத் ஸய்யிதுனா ஆதம் عَلَيْهِ السَّلَام அவர்கள் முதல் இதுவரை எத்தனை முஃமின்கள் மரணித்துள்ளனரோ அவர்கள் அனைவரும் பாவமன்னிப்புக்காக

துஆ இறைஞ்சுவார்கள். (முஸன்னஃப் இப்னு அபீ ஷைபா, பாகம்–10, பக்கம்–15)

9) பாவிகளை பரிந்துரைப்பவர்களான அண்ணல் நபி صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் அறிவித்துள்ளார்கள். எவர் கப்ருஸ்தானில் நுழைந்து, சூரதுல் ஃபாத்திஹா, சூரதுல் இக்லாஸ் மற்றும் சூரதுத் தகாசுர் ஓதி, பின்பு, யா அல்லாஹ் عَزَّوَجَلَّ! நான் ஓதிய இந்த குர்ஆன் வசனங்களின் நன்மையை இந்த கப்ருஸ்தானில் உள்ள முஃமினான ஆண்கள், பெண்களுக்கு சேர்ப்பித்து விடுவாயாக, என்று துஆ கேட்கின்றாரோ அவருக்காக அந்த அனைத்து முஃமின்களும் கியாமத் நாளன்று பரிந்துரை செய்வார்கள். (ஷர்ஹுஸ் ஸுதூர், பக்கம்–311) பரிசுத்த ஹதீஸில் வந்துள்ளது– யாராவது சூரதுல் இக்லாஸை 11 தடவைகள் ஓதி, அதன் நன்மையை மரணித்தோருக்கு அனுப்பினால், அவருக்கு (ஓதி அனுப்பியவருக்கு) மரணித்தோரின் எண்ணிக்கைக்கு சமமாக நன்மைகள் கிடைக்கும். (துர்ரெ முக்தார், பாகம்–3, பக்கம்–183)

10) கப்ரின் மேலே ஊதுபத்தியை எரிக்காதீர்கள். அது அவமரியாதையும், அபசகுனமுமாகும். ஆனால் (சமூகமளித்திருப்போருக்கு) நறுமணம் (சேர்ப்பிக்கும்) நாட்டமாக இருந்தால் கப்ரின் பக்கத்தில் காலியான இடம் இருந்தால் அதை அங்கே வைக்கலாம். ஏனெனில் நறுமணத்தை சேர்ப்பிப்பது விரும்பத்தக்க விடயமாகும். (முலக்கஸன் ஃபதாவா ரZஸவிய்யா முகர்ரஜா, பாகம்–9, பக்கம்–482, 525) அஃலா ஹழ்ரத் رَحْمَةُ اللّٰهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் இன்னுமொரு இடத்தில் குறிப்பிட்டுள்ளார்கள்– “ஸஹீஹ் முஸ்லிம் ஷரீபில்” ஹழ்ரத் அம்ர் பின் ஆஸ் رَضِيَ اللّٰهُ تَعَالٰى عَنْهُ

அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது, அவர்கள் மரணிக்கும் நேரத்தில் தன் மகனிடம் கூறினார்கள்: "நான் மரணித்து விட்டால் என்னுடன் ஒப்பாரி வைக்கின்ற பெண்களோ, நெருப்போ செல்லக்கூடாது." (முஸ்லிம், பக்கம்–75, ஹதீஸ்–192)

11) கப்ரின் மீது விளக்கு அல்லது மெழுகுவத்தி போன்றவற்றை வைக்கக் கூடாது. ஆனால் இரவிலே வழியில் நடப்போருக்கு வெளிச்சம் ஏற்படுத்தும் நோக்கம் இருந்தால், கப்ருடைய ஒரு பக்கத்தின் காலியான பூமியில் மெழுகுவத்தி அல்லது விளக்கை வைக்கலாம்.

ஆயிரக்கணக்கான சுன்னத்துக்களை கற்றுக்கொள்ள மக்தBபதுல் மதீனாவினால் அச்சிடப்பட்ட இரண்டு நூல்கள் **(1)** 312 பக்கங்கள் அடங்கிய **பஹாரே ஷரீஅத்** 16ஆம் பாகம் **(2)** 120 பக்கங்கள் அடங்கிய **சுன்னதே ஓர் ஆDதாப்** ஆகியவற்றை வாங்கிப் படியுங்கள். சுன்னத்துக்களின் பயிற்சியை பெற்றுக்கொள்ள ஒரு சிறந்த வழிமுறை **தஃவதே இஸ்லாமியின்** மதனி காஃபிலாக்களில் நாயகத்தின் ஆஷிகீன்களுடன் பிரயாணம் செய்வதுமாகும்.

صَلُّوْا عَلَى الْحَبِيْب صَلَّى اللهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

# பொருளடக்கம்

## அண்ணலாரின் மாதம்

**புத்தகம் வாசிக்கும்போது ஓதும் துஆ** .......... ii

ஸலவாத், ஸலாமுடைய ஆஷிகின் அந்தஸ்து .......... 1

அண்ணலாரின் صَلَّى اللهُ تَعَالَى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم மாதம் .......... 3

شعبان என்பதிலுள்ள ஐந்தெழுத்துக்களின் வசந்தங்கள் .......... 3

சங்கையான ஸஹாபாக்களின் عَلَيْهِمُ الرِّضْوَان ஆர்வம் .......... 4

தற்காலத்து முஸ்லிம்களின் ஆர்வம் .......... 5

நஃபிலான நோன்புகளுக்கு விருப்பமான மாதம் .......... 6

மக்கள் இதை விட்டும் பராமுகமாக உள்ளனர் .......... 6

மரணிப்போரின் பட்டியலை தயாரிக்கும் மாதம் .......... 7

அண்ணலார் ஷஃபானின் அதிகமான .......... 7

பரிசுத்த ஹதீஸின் விளக்கம் .......... 8

தஃவதே இஸ்லாமியில் நோன்புகளின் வசந்தங்கள் .......... 9

ஷஃபானின் அதிகமான நோன்புகளை நோற்பது .......... 9

நன்மைகளின் இரவுகள் .......... 10

நுண்ணிய தீர்ப்பு .......... 10

பல பாவிகள் மன்னிக்கப்பட்டு விடுகின்றனர், ஆனால் . . . .... 11

ஹழ்ரத் தாவூத் عَلَيْهِ السَّلَام அவர்களுடைய துஆ .......... 13

பயனடையாத மக்கள் .......... 14

அனைத்து முஸ்லிம்களுக்கும் இமாமே அஹ்லே ........................ 15
ஷஃபான் பதினைந்தாவது நாளின் நோன்பு................................ 18
பயனளிக்கும் விஷயம் .......................................................................... 18
பச்சை நிறச் சீட்டு .................................................................................. 19
மஃரிப் தொழுகைக்குப் பின் ஆறு நஃபில்கள் .............................. 20
சங்கையான ஷஃபான் மாதத்தின்15வது நாளின் துஆ............... 22
ஸGகே மதீனா عُفِيَ عَنْهُ வின் மதனி வேண்டுகோள்......................... 24
முழு வருடமும் சூனியத்தை விட்டும் பாதுகாப்பு......................... 25
பராஅத் இரவும், கப்ருகளின் தரிசனமும் ........................................... 25
பட்டாசுகளை கண்டுபிடித்தவன் யார்?............................................. 26
பராஅத்துடைய இரவில் நடைபெறும் பட்டாசுகள் ................... 27
பட்டாசுகள் ஆகுமான முறைகள்....................................................... 28
(1) பராஅத் இரவின் இஜ்திமாவினால் என் உள்ளம்................ 30
(2) சினிமாவின் இழிவு............................................................................ 32
"கண்ணியமிக்க ஷஃபான்" என்பதிலுள்ள 11................................. 34